OS 135/2021
வா.சா.1 பழனி த/பெ ராஜகோபால்
நாள் 09.09.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதிகள் 5 பேரும் அருள்மிகு சுந்தர விநாயகர் கோயிலுக்கு டிரஸ்டியாக இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அது போன்று ஆவணம் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்திருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கோயிலுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்றால் நஞ்சையில் 32 சென்ட்டும் புஞ்சையில் 11 சென்ட்டும் உள்ளது. மேற்படி சொத்துகளில் இருந்த வந்த வருமானத்தை பயன்படுத்தி கோயிலை மேம்பாடு செய்தோமா என்றால் வருமானம் ஏதும் இல்லை அதனால் கோயிலை மேம்பாடு செய்யவில்லை என்றால் தினம் பூஜை மட்டும் செய்து வருகிறோம். மேலே சொன்ன நிலங்கள் யார் பாதுகாப்பில் உள்ளது என்றால் என்னுடைய பாதுகாப்பில் உள்ளது. வேறு நபர்கள் ஆக்கிரப்பு செய்யாமல் பாதுகாப்பு செய்து வருகிறேன். அது சம்மந்தமாக ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேலே சொன்ன வழக்கு குறித்து இந்த வழக்கில் விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. இந்த கோயில் குலாலர் சமூகத்திற்க குல தெய்வம் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை நாங்கள் தான் கோயிலை கட்டினோம் கோயில் எப்போது கட்டப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆவணம் இல்லை. வாய்மொழியாக சொல்லியிருக்கிறார்கள். குலாலர் சமூகம் வழக்கு சம்மந்தமான கோயிலை கட்டவில்லை என்றால் சரியல்ல நாங்கள் தான் கட்டினோம். கோயிலை நாங்கள் பராமரித்து வருகிறோம் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் சொல்வது போல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகளை டிரஸ்டிகலாக அறிவிக்க வேண்டி விழுப்புரம் 2ம் பிரதிவாதியிடம் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனு உரிய விசாரணைக்கு பிறகு 29.12.2017ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. அந்த உத்தரவின் மீது ஆணையர் 1ம் பிரதிவாதியிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் 19.03.2020 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5ன் நகலை 07.12.2020ல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை 16.03.2021 ல் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். ஆணையர் தள்ளுபடி செய்த மேல்முறையீடு உத்தரவுக்கு பிறகு உத்தரவு நகல் பெறப்பட்ட தேதியில் இருந்து 90 நாட்களுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் அதனால் வழக்கு காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட கோயில் இந்து அறநிலையத்துறையில் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்றாலும் அதற்கான பூசாரிக்கான செலவை அரசாங்கம் வழங்குகிறது என்றாலும் சரிதான்.

4. அரசாங்கம் கொடுக்கும் சம்பளம் போதாது நாங்கள் நிர்வாகம் செய்து வருகிறோம். வாதிகள் பூசாரிக்கு செலவு செய்வதாக கூறுவதற்கு ஆதாரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இந்து அறநிலையத்துறை வழக்கு கோயிலை கும்பாபிஷேகம் செய்வதற்கு உத்தரவு போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்ய எங்களுக்கு உரிமை இல்லை என்றாலும் வழக்கு கோயிலை இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் வைத்துள்ளது என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.